# 06-05-2024 செய்தி

## தமிழகப் பொருளாதாரம் குறித்த ஆய்வு

- மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் தலைவர் மற்றும் இயக்குநர் முறையே சி.ரங்கராஜன் மற்றும் கே.ஆர். சண்முகம் ஆகியோரால் நடத்தப்பட்ட மாநிலப் பொருளாதாரம் குறித்த ஆய்வில் 2024-25 ஆம் ஆண்டில் தமிழகத்தின் பொருளாதாரம் 8.08% முதல் 10.69% என்ற விகிதத்தில் வளர்ச்சியடையும் என்று மதிப்பிட்டுள்ளார்.

- இந்த ஆய்வை மாநில நிதித்துறை நியமித்தது.

- இந்தியாவின் வளர்ச்சி முறையை விட தமிழ்நாட்டின் வளர்ச்சி உலகளாவிய ஏற்ற இறக்கங்களுக்கு ஆளாகிறது என்று அறிக்கை கூறுகிறது.

- பொதுக் கடனின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் இந்த ஆய்வு வலியுறுத்தியுள்ளது.

**தனிநபர் வருமானம்:**

- தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் தனிநபர் வருமானம் மாநில சராசரியை விட (ரூ.2,36,783) குறைவாக உள்ளது. ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

- சுமார் ரூ.3.64 லட்சத்துடன் திருவள்ளூர் முதலிடத்திலும், ஈரோடு (ரூ.3.57 லட்சம்), கோவை (ரூ.3.39 லட்சம்) இரண்டாவது மூன்றாவது இடத்திலும் உள்ளன.

- கடைசியில் பெரம்பலூர் (ரூ.1,07,731), திருவாரூர் (ரூ.1,25,653), விழுப்புரம் (ரூ.1,30,103) ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

- அகில இந்திய சராசரி ரூ.1.32 லட்சம்.

- 19 மாவட்டங்களின் வருவாயை அதிகரிக்க குறிப்பிட்ட திட்டங்கள் தேவை என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.